TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8040876

C

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

1. District மாவட்டம் : Tiruppur PS: காவல்நிலையம் VSAC Year ஆண்டு: 2024 FIR No.: முதஅ. எண் 4/2024/AC/TPR Date: நாள் 29.05.2024

2. (i) Act சட்டம்: The PC Act, 1988 as Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: amended by PC (Amendment) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act, 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 18.05.2024 15.00hrs Date to : நாள் வரை 28.05.2024 – 15.15hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 28.05.2024 - 21.10hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.05.2024 Time நேரம் : 07.15 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29.05.2024 GD Volume-I Time நேரம் : 07.15 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் at about 9 K.M. South East
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Nallur Revenue Inspector office, Tiruppur.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Jeeva (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Rajendran
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 27/2024 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Vegitable vendor (g) Address : முகவரி Door.No.241, Indra Nagar, Rangegoundampalayam, Kovil vazhi, Muthanampalayam (Po), Tiruppur.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. Mythili, Revenue Inspector, Nallur Firka, Tiruppur-South Taluk, Tiruppur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. [signature] 29/05/2024 R. [signature] 29/5/24

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 29.05.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Kowsalya
Rank: நிலை Inspector of Police, No. எண் ..........
VSAC, Tiruppur
29.05.2024.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 4/2024/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் R.கௌசல்யா ஆகிய நான் 29.05.2024-ம் தேதி காலை 07.15 மணியளவில் அலுவலகத்தில் இருந்த போது திரு.R.ஜீவா, த/பெ.ராஜேந்திரன், கதவு எண்.241, இந்திரா நகர், ரங்கேகவுண்டன்பாளையம், கோவில் வழி, முத்தணம்பாளையம் Po, திருப்பூர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரின் விவரம் பின்வருமாறு. அனுப்புனர் ரா.ஜீவா, த/பெ.ராஜேந்திரன், கதவு எண்.241, இந்திரா நகர், ரங்கேகவுண்டன்பாளையம், கோவில் வழி, முத்தணம்பாளையம் Po, திருப்பூர். பெறுநர் இன்ஸ்பெக்டர், லஞ்ச ஒழிப்புத்துறை, திருப்பூர். அய்யா, நான் திருப்பூர் மாவட்டம், முத்தணம்பாளையம், ரங்கேகவுண்டம்பாளையம், இந்திரா நகரில் என் அம்மா கமலாவுடன் குடியிருந்து வருகிறேன். என்னுடன் பிறந்தவர் ஒரு அக்கா நந்தினி. அவருக்கு திருமணமாகி கோயம்புத்தூரில் அவரது குடும்பத்துடன் வசித்து வருகிறார். எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. நான் B.E. ஆட்டோமொபைல் படித்துள்ளேன். நான், என் அப்பா, அம்மாவுடன் திருப்பூர் டவுனுக்குள் சந்தை நடைபெறும் இடங்களில் ரோட்டோரத்தில் காய்கறி வியாபாரம் செய்து வந்தேன். எங்களுக்கும் எங்களது பெரியப்பா ராமசாமி என்ற செல்வராஜ் அவர்களின் குடும்பத்தாருக்கும் தொழில் ரீதியாக பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை ஏற்பட்டு அதனால் கடந்த 31.01.2024 தேதி எனது பெரியப்பா மற்றும் அவரது மகன் ராஜ்குமார் ஆகியோர் என்னையும் எனது அப்பாவையும் தாக்கி எனது அப்பாவை கத்தியால் குத்தினார்கள். அதனால் சிகிச்சைக்காக எனது அப்பாவை திருப்பூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். நான் கொடுத்த புகாரின் பேரில் நல்லூர் போலீஸ் ஸ்டேசனில் FIR No.66/2024ன் படி என் பெரியப்பா மற்றும் அவரது மகன் ராஜ்குமார் மீது வழக்குப்பதிவு செய்தனர். அட்மிட்டில் இருந்த எனது அப்பா 16.02.2024 தேதி அன்று இறந்து விட்டார். என் அப்பா இறந்ததற்கு அரசாங்கத்தில் நிதியுதவி தருவார்கள் என்றும் அதற்கு வாரிசு சான்றிதழ் வேண்டும் என்று நல்லூர் காவல் நிலையத்தில் என்னிடம் கேட்டார்கள். அதனால் நான் கடந்த 02.05.2024ம் தேதி அன்று நல்லூரில் உள்ள E-சேவை மையத்தில் வாரிசு சான்றிதழ் கோரி ஆன்லைனில் விண்ணப்பித்தேன். அத்துடன் என் அம்மா மற்றும் எனது ஆதார் கார்டு, ரேசன் கார்டு ஆகியவற்றை இணைத்து ஆன்லைனில் விண்ணப்பித்தேன். சுமார் 3 நாட்கள் கழித்து நானும்

என் அம்மாவும் முத்தணம்பாளையம் கிராம நிர்வாக அலுவலரை நேரில் சந்தித்து வாரிசு சான்றிதழ் பற்றி கேட்டபோது அவர் விண்ணபத்தில் வாரிசுதாரர் பெயர்கள் தவறாக உள்ளது ஆகையால் நான் விண்ணபத்தை நிராகரித்து விடுகிறேன். நீங்கள் மீண்டும் வாரிசு பெயர்களை சரியாக குறிப்பிட்டு ஆன்லைனில் புதிதாக விண்ணப்பிக்குமாறும் கூறினார். அதன்பிறகு 10.05.2024ம் தேதி மதியம் சுமார் 3 மணியளவில் 9940747179 என்ற எண்ணிலிருந்து என்னுடைய செல் நம்பர் 8825539740 க்கு போன் வந்தது. அதில் பேசியவர் தான் நல்லூர் RI என்றும் வாரிசு சான்றிதழ் விண்ணப்பித்தது குறித்து என்னிடம் விசாரித்து விட்டு என்னை நேரில் வந்து பார்க்குமாறு கூறினார். அதன் படி நானும் எனது அம்மாவும் அன்றைய தினமே மாலை நல்லூர் RI அலுவலகம் சென்று நல்லூர் RI மைதிலி அவர்களை நேரில் சந்தித்தபோது அவர் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது என்று கூறினார். மேலும் 5 நாட்கள் கழித்து மீண்டும் விண்ண்ப்பிக்குமாறு கூறினார். அதன் பிறகு 17.05.2024ம் தேதி அன்று மீண்டும் நல்லூர் E-சேவை மையத்தில் என் அம்மா கமலா பெயரில் வாரிசு சான்றிதழ் கோரி விண்ணப்பித்தேன். அதன்பிறகு 18.05.2024ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் RI மைதிலி அவரது மேற்படி செல் நம்பரிலிருந்து எனக்கு போன் செய்து என்னை அவரது அலுவலகத்தில் நேரில் வந்து பார்க்கும்படி சொன்னார். அன்றைய தினம் மதியம் நானும் எனது அம்மாவும் RI அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தபோது RI மைதிலி அவர்கள் எனக்கு மீண்டும் போன் செய்து ஏன் இன்னும் வரவில்லை என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் உங்களை பார்க்க RI அலுவலகம் தான் வந்து கொண்டிருக்கிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் சீக்கரம் வாங்க என்று சொல்லிவிட்டு போனை கட் செய்து விட்டார். பிறகு நானும் என் அம்மாவும் மதியம் சுமார் 3 மணியளவில் RI அலுவலகத்தில் மைதிலி அவர்களை சந்தித்து வாரிசு சான்று பற்றி கேட்டபோது அவர் தனக்கு தனியாக ரூபாய் 7000 கொடுத்தால் தான் நான் உங்களுக்கு வாரிசு சான்றிதழ் கிடைக்க பரிந்துரை செய்வேன் என்று சொன்னார். நான் எங்களால் அவ்வளவு பணம் தரமுடியாது என்று சொல்லிவிட்டு நான் என் அம்மாவுடன் வீட்டிக்கு வந்துவிட்டேன். அதன் பிறகு 24.05.2024ம் தேதி காலை நான் என் அம்மாவுடன் முத்தணம்பாளையம் VAO அலுவலகத்திற்கு சென்று VAO ஜீவரத்தினம் அவர்களை சந்தித்து நான் வாரிசு சான்றிதழ் பற்றி கேட்டபோது அதற்கு அவர் verify செய்துவிட்டு கூப்பிடுகிறேன் என்று சொன்னதால் நான் எனது அம்மாவுடன் வீட்டிற்கு வந்து விட்டேன். பின்னர் 2 நாட்களாகியும் VAO என்னை கூப்பிடாததால் 27.05.2024ம் தேதி காலை VAO ஜீவரத்தினம் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து வாரிசு சான்றிதழ் பற்றி கேட்டபோது இன்று

Recommend செய்து RI க்கு அனுப்பிவிடுவேன் என்று சொன்னார். அன்றைய தினம் மாலை சுமார் 4 மணியளவில் RI மைதிலி அவர்கள் 9384094978 என்ற எண்ணிலிருந்து எனக்கு போன் செய்து உங்களது விண்ணப்பம் VAO அலுவலகத்திலிருந்து Verify ஆகி என்னிடம் வந்துவிட்டது என்னை அவரது அலுவலகத்தில் மறுநாள் காலை 28.05.2024ம் தேதி வந்து பார்க்கும்படி கூறினார். பிறகு 28.05.2024ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நல்லூர் RI மைதிலி அவர்கள் 9384094978 என்ற செல் நம்பரிலிருந்து எனக்கு போன் செய்து மீட்டிங் இருக்கிறது சீக்கிரம் ஆபிஸுக்கு வா என்று சொன்னார். நானும் மார்க்கெட்டில் லோடு ஏற்றும் வேலையை முடித்துவிட்டு ஆபிஸிக்கு வந்து பார்க்கிறேன் என்று சொன்னேன். பிறகு அன்று மதியம் சுமார் 1.45 மணிக்கு நல்லூர் RI அலுவலகத்திற்கு நான் சென்று பார்த்தபோது RI அலுவலகம் பூட்டப்பட்டிருந்தது. அதனால் நான் நல்லூர் RI அவர்களுக்கு என்னுடைய செல் நம்பரிலிருந்து RI அவர்களின் 9384094978 என்ற செல் நம்பருக்கு போன் செய்த போது அவர் தான் மீட்டிங்கில் உள்ளதாகவும் 3 மணிக்கு அலுவலகத்திற்கு வந்துவிடுவதாகவும் சொன்னார். பிறகு RI அவர்களின் செல்போனிலிருந்து எனது செல்போன் நம்பர் 8825539740 க்கு 3 o clock In meeting என்று மெசேஜும் வந்தது. பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டு மீண்டும் நல்லூர் RI அலுவலகத்திற்கு மதியம் சுமார் 3.15 மணியளவில் சென்றேன். அப்போது எனது செல்லை எடுத்து பார்த்தபோது நல்லூர் RI அவர்களின் 9384094978 என்ற செல் நம்பரிலிருந்து மதியம் சுமார் 3.10 மணியளவில் எனக்கு மிஸ்டு கால் வந்திருந்தது. அதைப்பார்த்த உடன் நான் நல்லூர் RI அவர்களுக்கு சுமார் 3.15 மணியளவில் போன் செய்தபோது அவர் தான் சாப்பிட்டு கொண்டிருக்கிறேன், 10 நிமிடம் கழித்து வா என்று கூறினார். அதனால் நான் சுமார் 10 நிமிடம் காத்திருந்துவிட்டு RI அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து வாரிசு சான்றிதழ் பற்றி கேட்டேன். அதற்கு RI மைதிலி அவர்கள் வாரிசு சான்றிதழ் recommend செய்வதற்கு நான் ஏற்கனவே உன்னிடம் ரூபாய் 7,000 கேட்டிருந்தேன். நீ ஒண்ணுமே கண்டுக்க மாட்டேன்ற அன்னைக்கு வந்தப்பவும் சும்மா போய்ட்ட, சும்மாவெல்லாம் Recommend செய்ய முடியாது என்று சொல்லி பணம் ரூ.7,000/- கேட்டார். அப்போது நான் என் அப்பாவை கொலை செய்து விட்டார்கள். ரோட்டோரத்தில் காய்கறி வியாபாரம் செய்துதான் பிழைத்து வருகிறோம் என்று சொல்லி குறைத்து கொள்ளும்படி கேட்டுக்கொண்டேன். அதற்கு அவர் சரி பணம் ரூபாய் 2,000 ஆவது கொடுத்தால் தான் நான் recommend செய்வேன் என்று கூறினார். நான் அவரிடம் இப்போ பணம் எதுவும் கொண்டுவரவில்லை என்று சொன்னேன். அதற்கு RI அவர்கள் சரி நான் இன்று recommend செய்து விடுகிறேன் நாளை நான் கூப்பிடமாட்டேன்

நீங்களே பணத்துடன் வந்திடுங்க என்று சொன்னார். மேலும் அவர் நீ இனிமே எந்த சர்டிபிகேட்னாலும் என்னிடம் தான் வந்தாக வேண்டும் என்று சொன்னார். நானும் சரிங்க மேடம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பிறகு நான் இரவு சுமார் 9.10 மணியளவில் எனது செல்போனை எடுத்து பார்த்தபோது அதில் வாரிசு சான்றிதழ் தொடர்பான விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும், E-சேவை மையத்திலேயே சான்றிதழை பெற்றுக்கொள்ளலாம் என எனக்கு இரவு சுமார் 8 மணியளவில் மெசேஜ் வந்திருந்தது. நான் அதைப்பார்த்தவுடன் RI மைதிலி அவர்களை எனது செல்போனிலிருந்து அவரது 9384094978 செல்நம்பருக்கு தொடர்புகொண்டு எனக்கு வந்த மெசேஜ் பற்றி தெரிவித்தேன். அப்போது அவர் நான் சொன்னபடி recommend செய்து உனக்கு வாரிசு சான்றிதழ் கிடைக்க ஏற்பாடு செய்துவிட்டேன். அதனால் நான் கேட்ட பணம் ரூபாய் 2,000 உடன் கண்டிப்பாக காலையில் என்னை அவரது அலுவலகத்தில் வந்து சந்தித்து பணத்தைக்கொடுக்குமாறு சொல்லிவிட்டு போனை கட் செய்து விட்டார். எனக்கு வாரிசு சான்றிதழ் கிடைக்க பரிந்துரை செய்து ஏற்பாடு செய்ததற்கு நல்லூர் RI மைதிலி அவர்கள் லஞ்சமாக கேட்கும் பணம் ரூபாய் 2000 ஐ கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. ஆதலால் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd/- xxxx R.Jeeva 29.05.2024 Sir, Received the complaint on 29.05.2024 at 07.15 hrs and conducted enquiry between 07.15 hrs to 07.40 hrs and after getting approval from DVAC, Chennai, registered a case in Tiruppur V&AC Cr.No.04/2024/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by the PC (Amendment) Act, 2018 at 08.45 hrs. Sd/- xxxx (R.Kousalya). Inspr. V&AC, TPR, 29.05.2024.

The original FIR along with original written complaint of Tr.R.Jeeva, S/o.Rajendran, Door No.241, Indra Nagar, Rangegoundenpalayam, Kovil Vazhi, Muthanampalayam (Po)., Tiruppur are submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(R.Kousalya),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur.